# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

**முறையீட்டு மனு எண்.529/2016/பே**
**ஆணை நாள்: 23–07–2018**

**தமிழ்நாடு பொதுமக்கள் விசாரணைக் குழு மற்றும்**
**சமூக ஆர்வலர்கள்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.** -- **முறையீட்டு மனுதாரர்கள்.**

**செயல் அலுவலர்,**
**வெள்ளிமலை பேரூராட்சி,**
**கன்னியாகுமரி மாவட்டம்,**
**மற்றும் மூவர்.** -- **எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

தமிழ்நாடு பொதுமக்கள் விசாரணைக் குழு, மற்றும் சமூக ஆர்வலர்கள், கன்னியாகுமரி மாவட்டம் என்ற அமைப்பினரின் முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை மூலமாக இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டடு, முறையீட்டு மனு எண் 529/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில், கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர்கள், தங்களது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளிமலை பேரூராட்சி மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தங்களது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

1. வீட்டுக் குடிநீர் இணைப்புக் கட்டணம் ரூ.4,000/– வசூலித்து ரசீது வழங்காமல் அரசு பதிவேட்டில் ஆவணமாக காட்டாமல் ரூ.9.00 லட்சம் வரை பேரூராட்சியால் முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

2. வெள்ளிமலை பேரூராட்சித் தலைவர் மற்றும் அவரது நெருங்கிய உறவினர் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புக் கட்டணம் வசூலிக்காமல் இலவசமாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்கு மாதந்தோறும் ரூபாய் ஒரு கோடியே இருபது லட்சம் வருமான இழப்பு.
3. 2007 முதல் 2013 வரை வெள்ளிமலை பேரூராட்சித் தலைவர் மற்றும் உறவினர்கள் மற்றும் பணிபுரியும் அலுவலர்கள், தினக்கூலி ஊழியர்கள் அனைத்து காண்ட்ராக்டர்களின் வீடுகளுக்கு மிக குறைந்த வீட்டு வரி கட்டணம் வசூலித்து பேரூராட்சி செயல் அலுவலர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியது இதன் மூலம் அரசுக்கு கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு.
4. 2006 முதல் 2013 வரை அரசின் வறுமைக் கோடு பட்டியல் தயாரிப்பில் வெள்ளிமலை பேரூராட்சித் தலைவர் மற்றும் செயல் அலுவலர் கூட்டாக சேர்ந்து பாரபட்சமாக ரூ.2000/- வீதம் பணம் வசூல் செய்து பட்டியல் தயாரித்து அரசுக்கு தவறான தகவல் அறிக்கை அளித்து ஊழல் நிறைந்த வறுமைக்கோடு பட்டியல் தயாரித்தும் உண்மையாக பாதிக்கப்பட்ட மக்கள் அரசின் நிவாரணம் பெறமுடியாமல் செய்தது.
5. 2007ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை வெள்ளிமலை பேரூராட்சி நிர்வாகத்தால் கட்டப்பட்ட அனைத்து வகை கட்டிடங்களிலும் காண்ட்ராக்டர் மூங்கில்விளை திருபூபதி முறைகேடாக அரசின் திட்ட மதிப்பீடுகளில், டெண்டர் விதிமுறைப்படி கட்டாமல் தரம் குறைந்த Hollow Bricks செங்கற்களை கொண்டு கட்டிடம் கட்டியுள்ளார்.

13.06.2016ம் நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.290/2016/அ.1/நாள்.2.12.2016ன்படி மேற்படி முறையீட்டு மனுவிற்கான தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

2007ம் ஆண்டு முதல் 2011-ம் ஆண்டு வரை வெள்ளிமலை பேரூராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகள் விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும் 2004-2005ல் புதிய குடிநீர் இணைப்பிற்கென 255 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் போதிய குடிநீர் ஆதாரம் இல்லாததால் 2004-05-ம் ஆண்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். பின்னர் புதியதாக பைப்லைன்கள் அமைக்கப்பட்டு 2007 -ஆம் ஆண்டு 255 குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டதாகவும் இதற்கான எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படவில்லை எனவும் இதனால் அரசுக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சி தலைவர், உறவினர் வீடுகளுக்கோ பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் வீடுகளுக்கோ எவருக்கும் இலவசமாக குடிநீர் இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், இதில் கையாடலோ, அரசுக்கு வருமான இழப்போ ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். 2006 முதல் 2013 வரை பேரூராட்சியில் வறுமைக் கோடு பட்டியல் ஏதும் தயார் செய்யப்படவில்லை எனவும் 2007-ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை வெள்ளிமலை பேரூராட்சியில் கட்டப்பட்ட கட்டிடங்கள் எதற்கும் Hollow Bricks செங்கல்களை கொண்டு கட்டப்படவில்லை எனவும் இது முழுக்க முழுக்க ஒப்பந்தக்காரர் திரு பூபதி என்பவரின் பேரில் உள்ள காழ்ப்புணர்ச்சியில் பேரில்

எழுப்பப்பட்ட புகார் எனவும் இதில் பேரூராட்சி தலைவர் மற்றும் செயல் அலுவலர், உதவி இயக்குநர் ஆகியோர்களுக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை எனவும், எந்தவிதமான முறைகேடுகளோ, கையாடலோ நடைபெறவில்லை எனவும் பேரூராட்சிக்கும் அரசுக்கும் எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 15.12.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான பத்தி வாரியான அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

20.01.2017ம் நாளிட்ட வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக பத்தி வாரியான அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கடியப்பட்டணம் கிராமம், வெள்ளிமலை பேரூராட்சிக்குட்பட்ட வெள்ளமோடி சந்திப்பு முதல் மணவாளக்குறிச்சி பாலம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை என தெரிவித்துள்ளார்.

2. வெள்ளமோடி சந்திப்பு முதல் மணவாளக்குறிச்சி பாலம் வரை உள்ள 2.5 கி.மீ.தூரமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை, விபத்துக்களும் நடைபெறவில்லை.

3. வெள்ளிமலை பேரூராட்சியில் 2008ம் ஆண்டு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களால் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் வெள்ளமோடி ஜங்ஷன் முதல் மணவாளக்குறிச்சி பாலம் வரை உள்ள மெயின் ரோட்டில் இருபுறமும் மழைநீர் வடிகால் செயல்படுத்த திட்டம் எதுவும் தீர்மானமாக நிறைவேற்றப்படவில்லை எனவும், மேலும் பத்தியில் குறிப்பிட்ட இடம் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானது எனவும் இதில் பேரூராட்சி தீர்மானம் எதுவும் நிறைவேற்ற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

4. வெள்ளிமலை பேரூராட்சி மன்றக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் திட்டங்கள் அனைத்தும் செயற்பொறியாளரின் மதிப்பீடு பெறப்பட்டு பணி ஆய்வாளரின் முன்னிலையிலேயே அனைத்துப் பணிகளும் செய்யப்படுவதாகவும், இதில் எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் Hollow Bricks கொண்டு பேரூராட்சியில் கட்டிடங்கள் எதுவும் கட்டப்படவில்லை எனவும், திரு.பூபதி ஒப்பந்தக்காரர், தன்னிச்சையாக எதுவும் செய்யவில்லை எனவும், பொறியாளரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே பேரூராட்சி நிபந்தனைகளின்படி வேலை செய்து வருகிறார். இதில் தலைவருக்கோ ஒப்பந்தக்காரருக்கோ சம்பந்தமில்லை எனவும், அவர்கள் சொத்துக்கள் வாங்கி குவிப்பது அவர்களது தனிப்பட்ட வருமானம் சம்பந்தப்பட்டது எனவும் இதில் பேரூராட்சி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

5. வெள்ளமோடி ஜங்ஷன் முதல் மணவாளக்குறிச்சி பாலம் வரை ரோட்டின் இரு புறமும் மழை நீர் வடிகால் வசதி ஏற்படுத்துவதற்காக அரசிடமிருந்து ஒதுக்கீடு எதுவும் கிடைக்கப்பெறவில்லை எனவும், பொது நிதியில் இருந்து மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் எந்தவிதமான வடிகால் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

2007 முதல் 2011 வரை வெள்ளிமலை பேரூராட்சியில் புதிய குடிநீர் இணைப்பிற்கான பணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை எனவும் இதில் ஊழல் எதுவும் நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார்.

வெள்ளிமலை பேரூராட்சி தலைவர் மற்றும் நெருங்கிய உறவினர் வீடுகளுக்கும் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கும் குடிநீர் இணைப்பு ஏதும் இலவசமாக வழங்கப்படவில்லை. குடிநீர் இணைப்பு கோப்புகள் அனைத்தும் தணிக்கையின்போது சரிபார்க்கப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது, இதில் அரசுக்கு இழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். 2006 முதல் 2013 வரை வறுமைக்கோடு பட்டியல் எதுவும் தயார் செய்யப்படவும் இல்லை என்றும் வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

03.03.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கத்தினை பெற இம்முறைமன்ற நடுவத்தில் 04.04.2017 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

04.04.2017ம் நாளன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு அ.அரசப்பன், தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"... லஞ்ச ஒழிப்புத்துறை மூலம் அளிக்கப்பட்ட குற்றத் தகவல் அறிக்கை தனக்கு தெரியும். இது குறித்து 10 தினங்களுக்குள் தனது முழுமையான அறிக்கையை சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் பெயரோடு சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலர் 04.04.2017ம் நாளிட்ட வாக்குமூலத்தின்படி தனது 26.07.2017ம் நாளிட்ட அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.01.2017ம் நாளிட்ட அறிக்கையினையே தற்போதும் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு, முறையீட்டு மனு தொடர்பான பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவற்றினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைத்து உரிய தல ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கையினை பிரத்யேக குறிப்புகளுடன் சமர்ப்பிக்குமாறு 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது. நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது தல ஆய்வு அறிக்கை ந.க.எண். 4932/2017/ப.4 நாள்.10.07.2017ன் மூலம் தனது ஆய்வறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நாகர்கோவில் மண்டலம், வெள்ளிமலை பேரூராட்சி தொடர்பாக வரப்பெற்ற புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கியது, வீட்டு வரி விதித்தல், வறுமைக் கோடு பட்டியல் தயாரித்தலில் முறைகேடு, மற்றும் திட்டப் பணிகளில் முறைகேடு தொடர்பான புகார்கள் குறித்து வெள்ளிமலை பேரூராட்சி அலுவலக ஆவணங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்கான அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. வெள்ளிமலை பேரூராட்சிக்குட்பட்ட வெள்ளமோடி சந்திப்பு முதல் மணவாளக்குறிச்சி பாலம் வரை உள்ள 2.50 கி.மீ தூரமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்புகள்

ஏதும் இருப்பின் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க நெடுஞ்சாலைத்துறைக்கு செயல் அலுவலரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. வெள்ளிமலை பேரூராட்சியில் 2008ம் ஆண்டு முதல் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் வெள்ளிமோடு ஜங்ஷன் முதல் மணவாளக்குறிச்சி பாலம் வரை உள்ள மெயின்ரோட்டில் இரு புறமும் மழை நீர் வடிகால் திட்டம் செயல்படுத்த ரூ.1.30 லட்சம் மதிப்பீட்டில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை எனவும் மேலும் மேற்படி இடமானது நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடமாதலால் இந்த இடங்களில் பேரூராட்சி சார்பாக எந்தவொரு வேலையும் செய்ய அனுமதி கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வெள்ளிமலை பேரூராட்சியில் 2007 முதல் 2011 வரை புதிதாக வீட்டு குடிநீர் இணைப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை எனவும், 2004-05 ஆம் ஆண்டில் புதிய குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் குடிநீர் ஆதாரங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் 255 குடிநீர் இணைப்பு கோரிய விண்ணப்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 255 குடிநீர் இணைப்புகளும் 2007ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளதாகவும், 255 குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை மற்றும் சென்டேஜ் கட்டணம், 2004-05ம் ஆண்டிலேயே பேரூராட்சி கணக்கில் வரவாக வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. வெள்ளிமலை பேரூராட்சித் தலைவர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் வீடுகளுக்கு இலவசமாக குடிநீர் இணைப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை என ஆய்வில் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. வெள்ளிமலை பேரூராட்சியில் 2007 முதல் 2013 வரை மிகக்குறைந்த வீட்டுவரிக் கட்டணம் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை எனவும் இதனால் அரசுக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. 2006ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை வெள்ளிமலை பேரூராட்சி நிர்வாகத்தால் வறுமைக்கோடு பட்டியல் எதுவும் தயார் செய்யப்படவில்லை எனவும், 2002-2003ம் ஆண்டில் தயார் செய்யப்பட்ட வறுமைக் கோடு பட்டியலே நாளது வரை பயன்பாட்டில் உள்ளது எனவும் மேற்படி வறுமைக் கோடு பட்டியலில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. பேரூராட்சியில் நடைபெற்ற பணிகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தால் தேர்வு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நிர்வாக/தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, பொறியாளர் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, பொறியாளர் மற்றும் பணி ஆய்வாளர் முன்னிலையில் பணிகள் நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், 2007ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை பேரூராட்சியில் நடைபெற்ற பணிகளுக்கு Hollow Bricks செங்கல்கள் பயன்படுத்தப்படவில்லை எனவும், மேலும் இப்புகார் மனுவில், குறிப்பிட்ட பொருள் குறித்தான ஆவண ஆதாரங்கள் குறிப்பிட்டோ/இணைத்தோ இல்லாமல் பொதுப்படையாக வரப்பெற்றுள்ளது எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனு, முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கை, வெள்ளிமலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டது.

இம்முறையீட்டு மனுவில், வெள்ளிமலை பேரூராட்சி தொடர்பாக குறிப்பிட்ட புகார் மற்றும் அதற்கான ஆவண ஆதாரங்கள் எதையும் குறிப்பிடாமலும், மேற்படி புகார் மனு குறிப்பிட்ட பெயர் உள்ள ஒரு நபரால் குறிப்பிட்ட புகாரின் பொருட்டு உரிய ஆதார ஆவணங்களுடன் புகாரினை தெரிவிக்காமல், ஒரு நிறுவனத்தின் பெயரில் புகார் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் இம்முறையீட்டு மனு தொடர்பாக நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கையின் மூலம் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் ஆதாரமற்றது என்பது உறுதியாகிறது. எனவே முறையீட்டு மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 23 –ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.செயல் அலுவலர்,
வெள்ளிமலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.